வெ.எண்-47 நாள்-24.12.2024

**கோயம்புத்தூர் மாவட்டம்**

**கோயம்புத்தூர் மாநகரில் மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்துதல் குறித்து, தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் முன்னனி நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோருடனான ஆலோசனைக்கூட்டம் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.எம்.ஏ.சித்திக் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

கோயம்புத்தூர் மாவட்டம் Fair field by Marriott ஹோட்டலில் இன்று இன்று(24.12.2024) கோயம்புத்தூர் மாநகரில் மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்துதல் குறித்து, தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் முன்னனி நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோருடனான ஆலோசனைக்கூட்டம் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.எம்.ஏ.சித்திக் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கிராந்திகுமார் பாடி இ.ஆ.ப., சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் திரு.தி.அர்ச்சுனன் IRSE, தலைமை பொது மேலாளர் திரு.டி.லிவிங்ஸ்டோன் எலியாசர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் திரு.மா.சிவகுருபிரபாகரன் இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர்.மோ.ஷர்மிளா, உதவி ஆட்சியர்(பயிற்சி) திரு.அங்கித் குமார் ஜெயின் இ.ஆ.ப., மற்றும் நெடுஞ்சாலைத் துறை, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், இந்திய விமான நிலைய ஆணையம், இரயில்வே, பொதுப்பணித் துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், ஆலோசகர்கள் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**இக்கூட்டத்தில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.எம்.ஏ.சித்திக் இ.ஆ.ப. ,அவர்கள் தெரிவித்ததாவது,**

போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும், எதிர்கால பயணத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், தமிழ்நாடு அரசு கோயம்புத்தூர் மாநகரில் மெட்ரோ இரயில் அமைப்பை செயல்படுத்த முடிவு செய்துள்ளது. முன்மொழியப்பட்ட கோயம்புத்தூர் மெட்ரோ இரயில் திட்டம் மொத்தம் 34.8 கி.மீ நீளத்தை உள்ளடக்கியது, இதன் மூலதனச் செலவு ரூ.10,740 கோடி. கோயம்புத்தூர் மெட்ரோ இரயில் - முதற்கட்டம் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை ஒன்றிய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டு, தற்போது அந்த அறிக்கை அவர்களால் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருகிறது.

இதற்கிடையில், மெட்ரோ திட்டத்தின் நடைமுறைகளை விரைவாக முடிப்பதற்கும், திட்டத்தை செயல்படுத்தும் கட்டத்தில் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை குறைப்பதற்கும், நிலம் கையகப்படுத்தும் திட்டங்களைத் தயாரித்தல், பயன்பாட்டு மாற்றுத் திட்டங்கள், சாலை மேம்பாலத்துடன் ஒருங்கிணைப்பு, ஒருங்கிணைந்த போக்குவரத்து முனையங்களாக (Multi Modal Integration) இரயில் நிலையங்களின் இணைப்பு போன்ற ஆரம்ப பணிகளைத் தொடங்கியுள்ளது.

திட்டச் செயலாக்கத்தின் போது நேரத்தை சரியான முறையில் பயன்படுத்துவது, நிலம் கையகப்படுத்துதலைக் குறைத்தல், பயன்பாட்டு மாற்றுத் திட்டங்களினால் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகள் குறித்து இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

**பின்னர் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.எம்.ஏ.சித்திக் இ.ஆ.ப. ,அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 34.8 கி.மீ நீளத்திற்கு 32 நிறுத்துமிடம் 2 வழித்தடத்தில் மெட்ரோ ரயில் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மாநில அரசு மூலம் ஒன்றிய அரசிற்கு சமர்ப்பித்துள்ளது. இந்த திட்டத்திற்கான ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களுக்கு ஒருங்கிணைந்த திட்டமாக ரூ.10,740 கோடி செலவிலும், ரூ.11,340 கோடி செலவிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை(Elevated corridor) செயல்படுத்த சுமார் 3 ஆண்டுகள் தேவைப்படும். ஒன்றரை ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகள் வரை நிலம் கையகப்படுத்துவதற்கும், இருக்கின்ற கழிவுநீர் செல்லும் பாதைகள், மின்வழித்தடங்கள், குடிநீர் செல்லும் பாதைகள் உள்ளிட்ட Utilities-யை மாற்றி அமைப்பதற்கும் செலவிடப்படும். அந்த பணிகளை முன்னதாகவே திட்டமிட்டு, நிலங்களை கையகப்படுத்துவதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுதொடர்பாக இன்று ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. ஜனவரி அல்லது பிப்ரவரியில் இதற்கு தேவையாக ஆரம்பகட்டப்பணிகள் தொடங்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். மெட்ரோ ரயில் திட்டம் என்பது 10 ஆண்டுகள் அல்லது 20 ஆண்டுகள் வளர்ச்சிக்கான கட்டுமானப் பணி அல்ல. இதன் கட்டமைப்பு 100- 150 ஆண்டுகள் வரை ஆகும். 2 வழித்தடங்களுக்காக சுமார் 10 ஹெக்டர் நிலமும், பணிமனை அமைக்க 16 ஹெக்டர் நிலமும் ஆர்ஜிதம் செய்யப்படவுள்ளது.

அடுத்தக்கட்டமாக வருங்காலங்களில் மேட்டுப்பாளையம், திருச்சி ரோடு, மெட்ரோ இரயில் வழித்தடங்கள் கொண்டுவர பரிசீலனையில் உள்ளது. விமானநிலையம், இரயில் நிலையம், பேருந்து நிலையம், பேருந்து நிறுத்துமிடங்கள், ஆகியவை பொதுமக்கள் பயன்படுத்தும் முக்கியமான போக்குவரத்து இடங்களாக இருக்கின்றது. இவற்றை ஒருங்கிணைக்கும் வகையில் மெட்ரோ இரயில் நிலையம் அமைக்கப்படும். என சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.எம்.ஏ.சித்திக் இ.ஆ.ப. ,அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

**வெளியீடு-செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கோயம்புத்தூர் மாவட்டம்**

---

கோயம்புத்தூர் மாவட்ட அரசு செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள:

collectorCoimbatore collectorCbe Pro Cbe cbe_pro prokovai22